அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# பொதுத்தேர்வு மாதிரித்தேர்வுத்தாள்

# தமிழ்
# ஆண்டு 9

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **சுட்டெண்:** | |

# பகுதி – 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1. ஆடற்கலை பற்றிக் கூறும் தமிழ்க் காப்பியம்
   1. ☐ கம்பராமாயணம்
   2. ☐ சிலப்பதிகாரம்
   3. ☐ யசோதரகாவியம்
   4. ☐ மணிமேகலை

2. வள்ளல் பாரிமன்னன் ஆண்ட மலை
   1. ☐ பொதினிமலை
   2. ☐ கொல்லிமலை
   3. ☐ பொதியமலை
   4. ☐ பறம்புமலை

3. வினாவெழுத்துகளின் எண்ணிக்கை
   1. ☐ இரண்டு
   2. ☐ மூன்று
   3. ☐ ஐந்து
   4. ☐ ஏழு

4. மானின் இளையது கன்று போல யானையின் இளையது
   1. ☐ போதகம்
   2. ☐ குருளை
   3. ☐ பிள்ளை
   4. ☐ பேத்தை

5. பகுசொல் உறுப்புகள் ஆறும் பெற்றுவந்த சொல்
   1. ☐ குடித்தனர்
   2. ☐ உண்டனன்
   3. ☐ வந்தனன்
   4. ☐ சென்றான்

6. யாழ்ப்பாணத்தின் வரலாற்றை அறிய உதவும் யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலை எழுதியவர்
   1. ☐ சோமசுந்தரப்புலவர்
   2. ☐ விபுலானந்தர்
   3. ☐ ஆறுமுகநாவலர்
   4. ☐ மயில்வாகனப்புலவர்

7. ஒரே எழுவாயில் பல சொல்லியங்கள் வரும் இடங்களில் பயன்படுத்தப்படும் நிறுத்தற் குறியீடு

   1. ☐ காற்புள்ளி
   2. ☐ அடைப்புக்குறி
   3. ☐ முக்காற்புள்ளி
   4. ☐ அரைப்புள்ளி

8. “பலகல்வி தந்து பாரை உயர்த்திட வேண்டும்” எனப் பாரதியார் பாடியுள்ளார். இதில் வந்துள்ள ஆகுபெயர்

   1. ☐ காலவாகுபெயர்
   2. ☐ இடவாகுபெயர்
   3. ☐ தொழிலாகுபெயர்
   4. ☐ பொருளாகுபெயர்

9. செய் + நன்றி என்பதன் சொற்புணர்ச்சி வடிவம்

   1. ☐ செய்நன்றி
   2. ☐ செந்நன்றி
   3. ☐ செய்ந்நன்றி
   4. ☐ சேய்ந்நன்றி

10. அன்பும் நட்பும் பேணப்பட்டு வந்தால் உலகில் ஒற்றுமை நிலைக்கும். நட்பு என்பதன் எதிர்ப்பொருட்சொல்

    1. ☐ உறவு
    2. ☐ பகை
    3. ☐ தோழமை
    4. ☐ மேன்மை

11. உலக அறிவு இன்மையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உவமைத்தொடர்

    1. ☐ குன்றின் மேலிட்ட விளக்குப் போல
    2. ☐ கலங்கரை விளக்குப் போல
    3. ☐ இலைமறை காய் போல
    4. ☐ கிணற்றுத் தவளை போல

12. உயிர்முன் உயிர் புணரும்போது தோன்றும் எழுத்துகள்

    1. ☐ க், ச்
    2. ☐ ப், வ்
    3. ☐ வ், ய்
    4. ☐ ய், ர்

13. ஊருக்குள் வந்த புதியவரை அவ்வூர் மக்கள் ஏற இறங்கப் பார்த்தனர். இதில் ஏற இறங்க என்பது

1. ☐ இணைமொழி
2. ☐ அடுக்குமொழி
3. ☐ அடுக்கிடுக்குமொழி
4. ☐ இரட்டைக்கிளவி

14. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன

1. ☐ ஐம்பொறி
2. ☐ ஐந்திலக்கணம்
3. ☐ ஐம்பூதம்
4. ☐ ஐம்புலன்

15. ஈழத்தவரான பத்மநாதன் சசிகரன் உருவாக்கிய கணினி எழுத்துரு

1. ☐ மயிலை
2. ☐ பாமினி
3. ☐ ஆதமி
4. ☐ அம்மா

16. தானாகச் சிந்தித்துச் செயலாற்றும் தன்மையற்றவர் எனும் பொருள் குறிக்கும் பழமொழி

1. ☐ பதறாத காரியம் சிதறாது
2. ☐ சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை
3. ☐ எறும்பூரக் கற்குழியும்
4. ☐ வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

17. வாட்படை என்பதன் சொற்பிரிப்பு வடிவம்

1. ☐ வாட் + படை
2. ☐ வாள் + படை
3. ☐ வால் + படை
4. ☐ வாற் + படை

18. முத்தமிழ் விழாவில் தமிழ்த்தேன் பருகிய அறிஞர் பலரும் கூடியிருந்தனர். இதில் தமிழ்த்தேன் என்பது

1. ☐ உவமை அணி
2. ☐ உருவக அணி
3. ☐ சிலேடை அணி
4. ☐ தற்குறிப்பேற்ற அணி

19. நடந்தாள் என்பதன் பிறவினை வடிவம்

1. ☐ நடக்கிறாள்
2. ☐ நடப்பாள்
3. ☐ நடப்பித்தாள்
4. ☐ நடக்கும்

20. பக்தி இலக்கிய காலத்தைத் தொடர்ந்து வந்த காலம்

1. ☐ நாயக்கர்காலம்
2. ☐ சங்ககாலம்
3. ☐ சோழர்காலம்
4. ☐ ஐரோப்பியர்காலம்

21. ஆந்தை அலறும் அதுபோல கோழி

1. ☐ அகவும்
2. ☐ கத்தும்
3. ☐ கொக்கரிக்கும்
4. ☐ கீச்சிடும்

22. திங்கள், மதி, அம்புலி என்னும் பல சொல் குறிக்கும் ஒருபொருள்

1. ☐ நிலா
2. ☐ பரிதி
3. ☐ விண்மீன்
4. ☐ முகில்

23. செயப்படுபொருள் குன்றிய சொல்லியமாக அமைவது

1. ☐ முதியவர் இருந்தார்.
2. ☐ குயிலி இனிமையாகப் பாடினாள்.
3. ☐ ஆசிரியர் வாழ்த்தினார்.
4. ☐ பூனை உருட்டியது.

24. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல். சுற்றம் என்பது

1. ☐ பொதுமக்கள்
2. ☐ உறவினர்
3. ☐ நண்பர்
4. ☐ பகைவர்

25. பிறரை மதிக்காது எதிர்த்துப் பேசுதல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்

1. ☐ வாய்காட்டல்
2. ☐ வாயடைத்தல்
3. ☐ வாயடங்கல்
4. ☐ வாயிழத்தல்

(25×1=25 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. கல்வெட்டு

______________________________

______________________________

2. இயற்கைவளம்

______________________________

______________________________

3. தொழிற்கல்வி

______________________________

______________________________

(3X1=3 புள்ளிகள்)

**3. பொருத்தமான சொல்லை வைத்து சொல்லியத்தை நிறைவு செய்க.**

| வேதியல் | போன்ற | மருட்கை | மை |
|---|---|---|---|

1. தாய் தன் குழந்தையின் கண்ணுக்கு ______________ இட்டு அழகு பார்த்தாள்.

2. ______________ கலப்பற்ற குளிர்பானம் அருந்துவது உடலுக்கு உகந்தது.

3. தங்கை தனது தளிர் ______________ பாதங்களால் மெல்ல நடந்து வந்தாள்.

4. நகை, அழுகை, ______________ , அச்சம், பெருமிதம் போன்றன மெய்ப்பாடுகளாகும்.

(4×1=4 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் வினாக்களுள் நீங்கள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சங்ககாலத்தைத் தொடர்ந்து வந்த காலத்தில் எவற்றை முதன்மைப்படுத்தி இலக்கியங்கள் படைக்கப்பட்டன?

2. உலகமயமாக்கலினால் ஏற்படும் நன்மை தீமை ஒவ்வொன்று எழுதுக.

3. சிலப்பதிகாரம் கூறும் எண்ணக்கருக்களை எழுதுக.

4. இலக்கணவகையில் சொற்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

5. கீழடி ஆய்வுகளால் தமிழரின் வரலாற்றுச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இச்செயப்பாட்டுவினைச் சொல்லியத்தை செய்வினைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

6. வண்ணமலர்கள் கொண்டு மாலை தொடுத்தாள். இச்சொல்லியத்தில் வந்துள்ள சொல்லுருபையும் பொருளையும் எழுதுக.

சொல்லுருபு: ______________________

பொருள்: ______________________

7. தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என்பவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

தெரிநிலை வினைமுற்று - ______________________

குறிப்பு வினைமுற்று - ______________________

(5X2=10 புள்ளிகள்)

**5. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

செந்தமிழ் மக்களே வாரீர் - எங்கள்
தெய்வத் தமிழ்மொழிச் சீரினைத் தேரீர்
அந்தமில் எம்மொழி மாதா - படும்
அல்லலைத் தீர்க்க அறிவு வராதா

முச்சங்கத் தரியணை யேறி - மன்னர்
முடிதொட்ட மூவரும் அடிதொட்டுப் போற்ற
விச்சையால் அரசாண்ட மாதா - அவள்
வேதனை தீர்க்க இரக்கம் வராதா

- நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

1. யாருடைய அல்லலைத் தீர்க்க வேண்டும் என்று புலவர் கூறுகிறார்?

______________________________________________

2. இப்பாடலில் மாதா எனக் புலவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

______________________________________________

3. வாரீர்! என்று புலவர் யாரை அழைக்கிறார்?

______________________________________________

(3X1=3 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் சொல்லியங்களைத் தமிழ்மொழியில் எழுதுக.**

(5×1=5 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. மனித விழுமியங்கள்
2. சூழலைப் பாதுகாப்போம்
3. அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழியே அடிப்படை

உள்ளடக்கக் குறிப்புகள்:

- தாய்மொழியின் சிறப்பு
- தாய்மொழி கற்றலின் அகத்தியம்
- தாய்மொழி மூலம் அறிவைப் பெருக்குதல்

(15 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

இறப்பர் மரத்தின் தாவரவியல் பெயர் ‘பைகசு எலாசுடிகா’ என்பதாகும். முதன்முதலில் இறப்பரின் உபயோகத்தை அறிந்தவர்கள் தென் அமெரிக்கர்கள். அவர்கள் இறப்பர் மரத்தைக் கூச்சி என்று அழைத்தனர். கூச்சி என்றால் கண்ணீர் வடிக்கும் மரம் என்று பொருள். இறப்பர்ப்பாலுக்கு லாடெக்சு என்று பெயர். இவர்கள் இறப்பர்ப்பாலிலிருந்து செருப்புகள், கிண்ணங்கள், குவளைகள் என்பவற்றைச் செய்தார்கள். யோசப்பிரிட்லி என்பவர் கரிக்கோலின் கோடுகளை அழிக்க இது உதவுவதால் இறப்பர் என முதன்முதலில் அழைத்தார். இறப்பர்ப்பாலைப் பயன்படுத்தி மழை காலத்தில் அணியும் ஆடை தயாரிக்கலாம். இதன் பின்பு வாகனங்களுக்குரிய காற்றடைப்பதற்கான இறப்பர்க் குழாய்களும் கண்டுபிடிக்கப்பட்டன. பிரித்தானியர் இறப்பர் மரங்களை இந்தியாவில் கொல்கத்தாவிலுள்ள தாவரவியல் பூங்காவில் நட்டு அறிமுகப்படுத்தினர். உலக இறப்பர் உற்பத்தியில் தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, இந்தியா ஆகிய நாடுகள் முதல் நான்கு இடங்களையும் வகிக்கின்றன. ஈழத்திலும் இறப்பர் உற்பத்தி செய்யப்படுகின்றது.

1. முதன்முதலில் இறப்பரின் உபயோகத்தை அறிந்தவர்கள் யார்? (1 புள்ளி)

   ______________________________

2. இறப்பர் மரத்தின் தாவரவியல் பெயர் என்ன? (1 புள்ளி)

   ______________________________

3. தென் அமெரிக்கர்கள் இறப்பர்ப்பாலிலிருந்து எவற்றைச் செய்தார்கள்? (2 புள்ளிகள்)

   ______________________________

4. பிரித்தானியர் இந்தியாவில் எவ்விடத்தில் இறப்பர் மரங்களை நட்டு அறிமுகப்படுத்தினர்? (1 புள்ளி)

   ______________________________

5. உலக இறப்பர் உற்பத்தியில் முதல் நான்கு இடங்களையும் வகிக்கும் நாடுகளை எழுதுக. (2 புள்ளிகள்)

   ______________________________

6. தென் அமெரிக்கர்கள் இறப்பர் மரத்தை எவ்வாறு அழைத்தனர்? (1 புள்ளி)

   ______________________________

7. இறப்பர் என முதன்முதலில் அழைத்தவர் யார்? இவ்வாறு அழைத்ததற்கான காரணம் யாது? (2 புள்ளிகள்)

   ______________________________

   ______________________________

(10 புள்ளிகள்)

**2. மாறியிருக்கும் சொல்லியங்களைப் பந்தி அமைப்புக்குப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி, அவற்றின் எண்களைக் கட்டத்தினுள் எழுதுக.**

1. பின்னர் அவர்கள் குகைகளில் வசிக்கக் கற்றுக்கொண்டார்கள்.

2. அந்தக் கூரிய கல்லை எழுதுகோல் போல் பயன்படுத்தி குகைகளில் சித்திரங்களை வரைந்தார்கள்.

3. ஆதிகாலத்தில் மாந்தர் திறந்த வெளிகளில் வசித்து வந்தார்கள்.

4. அப்போது அவர்கள் கற்களைக் கூர்மையாக்கி அதைத் தற்காப்புக் கருவியாகப் பயன்படுத்தி வந்தார்கள்.

5. அந்தச் சித்திரங்கள் அவர்களின் அன்றாட வாழ்க்கையையும் அவர்கள் வேட்டையாடுவதில் அடைந்த வெற்றிகளையும் குறிப்பிடுவதாக அமைந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 03 | | | |
| 3 | 04 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 03 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |